ஓம் சரவணஜோதியே நமோ நம

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

12.02.2026

1. சன்மார்க்க நெறி கொண்டு உலகினில்
சகலருக்கும் ஞானம் தர வேண்டி
சண்முகனார் ஆசிபட வந்தநல்
சற்குரு அரங்கமகான் யானும்

2. யானுமே விசுவாவசு கலை திங்கள்
உயர்வான பஞ்ச கடை குருவார அருளாசி
ஞானம்பட அருட்சுவடி வழியில்
நாட்டிடுவேன் உலகோர் நலம்பெற

3. நலம் தரும் ஞானிகள் பூசைதன்னை
நாளும் மக்களெல்லாம் செய்துமே
பலம்தரும் அன்னதான சேவையை
பழுதின்றி மக்களெல்லாம் செய்துமே

4. செய்துமே அரங்கன் யான் காட்டும்
சிறப்பான வழிமுறைகள் தன்னை
அய்யமற மக்களெல்லாம் ஏற்று
அரங்கனென் பிரணவக்குடில் நோக்கி வர

5. வருகவே ஞானிகளின் ஆசி
வரமாகக் கிட்டி மாற்றமும்
முருகப் பெருமான் அருளும்
முழுமையான அனுகூலமும் கிட்ட நேரும்

6. நேருமைபட சுத்த சைவ நெறிபட
நித்தமும் எந்தன் நாமசெபம் கூறி
வறுமை பிணி சத்ரு கட்டமில்லா
வாழ்வும் வளமும் தா என வேண்டிட

7. வேண்டிட அவரவர் விருப்பங்கள்
வெற்றி கொள்ளும்படி இனிதே
உண்டான ஞானிகள் படைகள்
உடன் இறங்கி அருள்புரிவர்

8. அருளவே முருகப்பெருமான் ஆசிபட
அரங்கனென் சீடர் பெருமக்கள்
வரம்பெற்று உலகையே மாற்றும்
வல்லமைமிக்க தருமசாலைகளை நிறுவி

9. நிறுவியே தருமம் வளர்த்து வர
நிலவுலகோர் அணுகி இனிதே
தருமம் வகை பொருளுதவி செய்து
தானும் தருமபலம் பெருக்கியே

10. பெருக்கியே தருமவான்கள் ஆகிட
பெருமைமிக்க ஞானிகள் படை
கருத்தாக அணுகி துணை நின்று
கருணைபுரிந்து பேரருள்புரிய

11. அருள்புரிய அரங்கன் என்வழி வரும்
அனைவரும் கடைத்தேற்றம்தனை
வரமாக அடைந்து தேறுவர்
வழங்கிய அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி